செய்தி வெளியீடு எண்:1060 நாள்: 02.12.2010

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டம்

### பள்ளியிறுதி தேர்வு தேர்ச்சி பெறாதவர்களுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுவது பயன்பெற விரும்பும் பயனாளிகளின் கவனத்திற்கு

அரசாணை நிலை எண். 215, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்2) துறை, நாள் 25.10.2010. வாயிலாக, பள்ளியிறுதி தேர்வு, மேல்நிலைக்கல்வித் தேர்வு மற்றும் பட்டதாரி கல்வி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்றே, 2010–2011ம் நிதியாண்டில், அனைத்து **பள்ளியிறுதி தேர்வு தேர்ச்சி பெறாதவர்களுக்கும்** வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்க அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிகள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்பவராக இருத்தல் வேண்டும் :-

1. பயன்தாரர் முறையாகப் பள்ளியில் 9வது வகுப்பு தேர்ச்சி பெற்று, பின்னர் 10வது பள்ளியிறுதி தேர்வில் கலந்து கொண்டு தோல்வியடைந்தவர்களாக இருந்து, தமது கல்வித் தகுதியை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருப்பவராக இருத்தல் அவசியம்.

2. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளைப் பொறுத்தவரை 45 வயதைக் கடக்காதவராகவும், இதர வகை பயனாளிகளைப் பொறுத்தவரை 40 வயதைக் கடக்காதவராகவும் இருத்தல் அவசியம்.

3. பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருத்தல் அவசியம்.

4. பயனாளி, அரசு நிறுவனங்களிலோ அல்லது எந்தவொரு தனியார் நிறுவனத்திலோ பணிபுரிபவராக இருத்தலாகாது. சுய தொழிலிலும் ஈடுபடலாகாது.

5. பயனாளி பள்ளி அல்லது கல்லூரியில் பயிலும் முழு நேர மாணாக்கராக இருத்தலாகாது.

6) பயனாளி குறைபட்சம் 15 ஆண்டுகளாவது தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் அவசியம்.

- மேலே, தெரிவிக்கப்பட்ட இனம் 1 முதல் 6 வரை இடம் பெறும் முற்படு தகுதிகளை உறுதி செய்யும் வகையில் பயனாளி வருவாய்த் துறையிடமிருந்து, ஒரு ஒருங்கிணைந்த சான்றிதழை பெற்று, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற அனுமதிக்கப்படும் பொழுது அளித்தல் வேண்டும்.

- இந்த உதவித்தொகை அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியில் பயனாளி பராமரித்து வரும் சேமிப்புக் கணக்கு வாயிலாக ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் வழங்கப்படும்.

- இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு பிரதி மாதம் ரூ.100/– வீதம், உதவித்தொகையாக 3 ஆண்டுகளுக்கு இதர நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படும்.

- இத்திட்டத்தின் கீழ், தொடர்ந்து பயன்பெற பயனாளி, தான் அனுமதிக்கப்பட்ட பின்னர், ஒவ்வொரு ஆண்டு நிறைவு செய்யும்பொழுதும், அதாவது 2வது மற்றும் 3வது ஆண்டுகளின் துவக்கத்தில் தாம் எந்தவொரு வேலையிலும் இல்லை என்பதை உறுதி செய்யும் சுயஉறுதி ஆவணத்தை, தமக்கு உதவித்தொகை வழங்கும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அவசியம் சமர்ப்பிக்க வேண்டும்.

- இத்திட்டத்தின் கீழ், பயன்பெற விரும்பும் பள்ளியிறுதி தேர்வு தேர்ச்சி பெறாத பதிவுதாரர்கள், தாம் பதிவு செய்துள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்துடன், அனைத்து சான்றிதழ்களுடன், தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**